# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
## THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-11/PW- 8 | Village: | |
| Name | :மகேஸ்வரி, தலைமை காவலர் | Age | : |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : | | |
| | | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/01/2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17/10/2019 ல் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.16/2019, சட்டப்பிரிவு 417,493,506(2)இதச வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் சசிகலா, த/பெ. பவுன்ராஜ் என்பவரை மருத்துவ பரிசோதனைக்காக ஆய்வாயர் வேண்டுகோள் கடிதம் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ஆஜர் படுத்தி, மருத்துவ பரிசோதனை முடித்து சான்று பெற்றேன். அதன் பிறகு 04/11/2019 ம் தேதி நானும், நாச்சியார்கோவில் காவல் நிலைய இரண்டாம் நிலை காவலர் கிருஷ்ணன் என்பவரும் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.16/2019, சட்டப்பிரிவு 417,493,506(2)இதச சம்மந்தப்பட்ட எதிரியான ரகுபதி, த/பெ.சேகர் என்பவரை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டி சமூகம் நீதிமன்ற உத்தரவு பெற்று அவரை

மருத்துவ பரிசோதனை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ஆஜர் படுத்தினேன். மருத்துவ பரிசோதனைக்கு பிறகு உரிய மருத்துவ சான்று பெற்று எதிரியை திருவிடைமருதூர் கிளைச்சிறையில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 56/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-8/PW- 7 | Village: |
| Name | :அஷ்டலெட்சுமி, | Age : |
| மருத்துவர் | | Taluk : |
| Father's/Husband's Name | : | |
| | | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/01/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் தலைமை காவலர் திருமதி. மகேஸ்வரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17/10/2019 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, அன்றையதினம் மதியம் 02.50 மணியளவில் பி.சசிகலா என்ற 19 வயது நிரம்பிய பெண் மருத்துவ பரிசோதனைக்காக முதல்நிலை காவலர் மகேஸ்வரி என்பவர் மூலம் என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது, அவர் வசிக்கும் வீட்டின் அருகில் இருக்கும் தெரிந்த நபர் ஒருவருடன் ஒரு வருட காலமாக உடலுறுவில் ஈடுபட்டு இருந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். நாடித்துடிப்பு , இதயதுடிப்பு மற்றும் சுவாச மண்டலம் சீராக இருந்தது. வயிற்று பகுதி பரிசோதனையில் கர்ப்ப பை 20 வாரங்கள்

அளவிற்கு விரிவடைந்து இருந்தது. சிறுநீர் பரிசோதனையில் அவர் கர்ப்பமாக இருந்தார் என்று தெரிய வந்தது. ஸ்கேன் பரிசோதனையில் 20-24 வாரங்கள் நிரம்பிய கரு வளர்ச்சி இருந்தது. கருவின் துடிப்பு சீராக இருந்தது. ரத்தப்பரிசோதனைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ ஆய்வின் முடிவில் அவர் 6 மாத கர்ப்பமாக இருந்தார். அதற்காக சான்று வழங்கினேன். என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய மருத்துவ சான்று என்னால் வழங்கப்பட்டது தான். (**மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய மருத்துவ சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**